பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 11 வியாழக்கிழமை 25.01.2024 கதிர் 79

# நாடாளுமன்றில் நிறைவேறியது நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம்

## சமூக ஊடகங்கள் மீது வருகிறது கண்காணிப்பு

நாடாளுமன்றத்தில் இருநாட்களாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் நேற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் முடிவடைந்ததும் பி.ப. 5 மணிக்கு எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவால் வாக்கெடுப்புக் கோரப்பட்டது.

இதற்கு அமைய நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 108 வாக்கும் எதிராக 62 வாக்குகளும் பதிவாகின. இதற்கமைய சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு 46 மேலதிக வாக்குகளால் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

அண்மையில் நாட்டில் இரு பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றன. இலங்கை முழுவதும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு மக்கள் பொங்கலைக் கொண்டாடுவதற்கே திணறிக் கொண்டி-ருந்த நிலையில் கிழக்கிலும் மலையத்திலும் மட்டும் வெகு விமரிசையாகக் பொங்கல் கொண்டாட்டங்கள் பெருமெடுப்பில் நடந்தன. இரண்டையும் திட்டமிட்டு நடத்தியவர்கள் மலையகத்தைச் சேர்ந்த ஒரே குடும்பப் பின்னணியிலிருந்து வந்த அரசியல் வாதிகள்.

கிழக்கில் பொங்கல் விழாவை ஒழுங்குபடுத்தி நடத்தியவர் மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான். முதல் தடவையாக இந்தப் பொங்கல் விழாவில் ☞ 2

## கொழும்பில் நேற்றிரவு துப்பாக்கிச் சூடு

கொழும்பு, கொட்டாஞ்சேனை ஜிந்துபிட்டி பகுதியில் நேற்றிரவு துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

இரவு 9.30 அளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மோட்டார்சைக்கிளில்வந்தஅடையாளந்தெரியாத இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றன் என்று குறிப்பிடப்படுகிறது.

# நிகழ்நிலை காப்புச் சட்டத்தை ஆளும் தரப்பினர் குறைபாடுகளுடன் நிறைவேற்ற என்ன அவசரம்

## நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் கேள்வி

பெரும்குறைபாடுகள் இருக்கத்தக்கதாக இந்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு என்ன அவசரம் ஏற்பட்டுள்ளது? ஏற்கனவே சர்வதேச மட்டத்தில் உதவி கேட்டுக்கொண்டிருக்கும் சிறிலங்காவுக்கு, அந்த சர்வதேச அமைப்புக்களினுடைய உதவிகள் வராமல் பண்ணுவதற்கு வழியேற்படுத்தப் போகின்ற ஆபத்துக்கள் உள்ள நிலையிலும், இந்தச் சட்ட மூலத்தை அவசர அவசரமாக ஏன் நிறைவேற்றுகின்றீர்கள் என்றால் - இது பாரதூரமான ஜனநாயகத்தை மறுக்கக்கூடிய சட்டமூலம் என்று விமர்சனங்கள் இருக்கக் கூடியதாகவே அவசரமாகவே நிறைவேற்றுவதற்கு நீங்கள் விரும்புகிறீர்கள் என்றால், அதற்கு காரணம் ☞ 2

# தேர்தல்களை இலக்காகக்கொண்டே நிகழ்நிலை காப்புச் சட்டம் வருகிறது

## எதிர்க் கட்சித் தலைவர் இடித்துரைப்பு

ஜனாதிபதித் தேர்தல் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதை அடிப்படையாக்கொண்டே நிகழ்நிலைக்காப்புச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம் மற்றும் ஜனநாயக உரிமையை அழிக்கும் நோக்கிலயே இந்தச் சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிகழ்நிலைக் காப்புசட்டமூலம் சம்பந்தமான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

220 இலட்சம் மக்களின் பொதுவான விருப்பங்களின் அடிப்படையில் சட்டங்களை உருவாக்கு ☞ 8

# மாடுகளை மோதி பேருந்து வானையும் மோதி விபத்து

## 9 உயிர்கள் சாவு; 8 பேர் காயம்

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்; 8 பேர் காயமடைந்தனர். 8 எருமை மாடுகளும் உயிரிழந்தன.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் விபத்து நிகழ்ந்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்த அரச பேருந்துடன், எதிர்த் திசையில் கொழும்பியிருந்துயாழ்ப்பாணம் நோக்கி பயணித்த வான் மோதி விபத்துக்குள்ளாகியது.

பேருந்து விதியைக் கடந்த எருமை மாடுகளுடன் மோதிய பின் எதிரேவந்தவானுடனும் மோதியதில் விபத்து நிகழ்ந்துள்ளதாகப் பொலிஸார்தெரிவித்தனர். ☞ 2

# 60 வகை மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டப்பாடு

இலங்கையின் மருத்துவக்கட்டமைப்பில் 60 வகையான மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பற்றாக்குறையாகவுள்ள சகல வகையான மருந்துகளுக்கும் தற்போது முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த மருந்துகள் சில வாரங்களுக்குள் கட்டம் கட்டமாக நாட்டிற்குள் கொண்டுவரப்படும். உள்நாட்டுஉற்பத்தியாளர்களிடமிருந்து தற்போது அதிகளவு மருந்துகள் கொள்வனவு செய்யப்படுகிறதுஎன்றும்அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மீது நீதிமன்றத்தில் 18 மனுக்கள்

பயங்கரவாதஎதிர்ப்பு எனும்சட்டமூலம்தொடர்பில் மேலும் 18 மனுக்களும், நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை எனும் சட்டமூலம் தொடர்பில் மேலும் 5 மனுக்களும்தாக்கல்செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் தலைமையில்தொடங்கியபோது, அவர் இந்த விவரங்களை அறிவித்தார். அந்த அறிவிப்பில் மேலும் தெரிவித்ததாவது:

2024 ஜனவரி 23 எனது அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஆறு மனுக்களுக்கு மேலதிகமாக, அரசமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'பயங்கரவாத எதிர்ப்பு' எனும்சட்டமூலம் தொடர்பாகஉயர்நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலும் பதினெட்டு மனுக்களின் பிரதிகள் எனக்குஅனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

அதேநேரம், அரசமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின்பிரகாரம் 'நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை' எனும்சட்டமூலம் தொடர்பாகஉயர்நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலும் ☞ 2

# நிறைவேற்றினாலும் அது சட்டமாக முடியாது

## சுமந்திரன் எம்.பி. எடுத்துரைப்பு

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முரணாக நிகழ்நிலை காப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினாலும் அது சட்டமாகாது என்று இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் சம்பந்தமான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தினை மிகக் கவனமாக கையாண்டிருக்க வேண்டும். 13 விடயங்கள் சம்பந்தமாக என்னால் வெளிப்படுத்த முடியும். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஒவ்வொரு பக்கமாக உங்களுக்கு தெளிவுபடுத்த முடியும்.

நீங்கள் மேற்கொண்டிருக்கும் தீர்ப்பானது உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்குமிகவும்முரணானதாகும். நீங்கள் ☞ 2

# கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு முழுமையான மருத்துவச் சோதனை

## அறிமுகமாகின்றது புதிய திட்டம்

மீனவர்களுக்கு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனை செய்யும் புதிய திட்டம் ஒன்றைத் தொடங்கவுள்ளதாகவும் முதலில் ஆழ்கடல் மீன்பிடிக்குச் செல்வோருக்கும் பின்னர் படிப்படியாக ஏனைய மீனவர்களுக்கும் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:,

கடலுக்குமீன்பிடிக்கச் செல்லும்போது சுகவீனமடைவது மீனவர்கள் எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகளில்ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலில் திடீரென ☞ 10

# புதிய சட்டங்கள் நடைமுறைக்கு

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சட்டமூலம், மத்தியஸ்த சபை (திருத்தச்) சட்டமூலம், அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் என்பவற்றில் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தியதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் அறிவித்தல் நேரத்தில் இந்த விடயங்களை அவர்வெளிப்படுத்தினார்.

இந்தச்சட்டமூலங்கள் 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய ஒற்றுமைக்கும் ☞ 2

## இனி இது .....

ஜல்லிக்கட்டு எனப்படும் ஏறுதழுவுதல் விளையாட்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்காக பழக்கப்படாத வன்னி மாடுகளும் தமிழ்நாட்டிலிருந்து நன்கு பழக்கப்பட்ட மாடுபிடி வீரர்களும் அழைத்துவரப்பட்டிருந்தனர்என்கிற சர்ச்சைகளும் எழுந்திருந்தன. பொங்கல் தினத்திற்கு முன்பாகவே ஆளுநரின் இந்தப் பொங்கல் விழா திட்டமிடப்பட்டிருந்ததும் ஒரு சர்ச்சையாகியது. அதற்கெதிராக கிழக்கிலிருந்து அறிக்கைகளும்கூட விடப்பட்டன. அதையடுத்து ஆளுநர் அது பொங்கல் விழாவல்ல இது, ஒரு பண்பாட்டு விழா என்று சமாளித்ததெல்லாம்கூட நடந்தது.

செந்தில் தொண்டமானுக்கு ஜல்லிக்கட்டுக் "காளை"களின் மீது ஆர்வம் அதிகம். தமிழ்நாட்டில் அவர் ஜல்லிக்கட்டுக் காளை வளர்ப்பிக்கிறார். உலகப்புகழ்பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டில் கடந்தசிலவருடங்களாகவேஅவரது பெயரில் காளைகள் பாய்கின்றன. இந்த வருடமும் அவரது காளை வெற்றிபெற்றதாக ஊடகங்களில் செய்திகள் வந்திருந்தன. எனவே அவரது தனிப்பட்ட ஆர்வத்தைப் பரவலாக்கலாம் என்கிற ஆசையில் தமிழ்நாட்டில் இருந்து மாடுபிடி வீரர்களை அழைத்துவந்ததாலோ என்னவோ அவர் தப்பிவிட்டார்.

ஆனால், அவரது உறவினரும் இளம் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மலையகத்தில் நடத்திய பொங்கல்விழா வேறு வகையில் சர்ச்சையையும் வில்லங்கத்தையும் அவுக்கு ஏற்படுத்திவிட்டது. இவர் கட்டு மஸ்தான ஆண் மாடுபிடி வீரர்களை இறக்கினார் என்றால், அவர் (ஜீவன்) பளபளக்கும் பச்சைக் கிளிகளைப் போன்ற இளம் நடிகைகளை மலையகப் பொங்கல் பெருவிழாவிற்கு வரவழைத்திருந்தார்.

வடசென்னை திரைப்படப் புகழ் ஐஸ்வர்யா ரஜேஸ், பிக்பாஸ் புகழ் சம்யுக்தா, ஐஸ்வர்யா என்று அழகான 4 நடிகைகளை வரவழைத்திருந்தார் ஜீவன். பொருளாதார நெருக்கடியால் உண்பதற்கு வழியற்று வாடி வதங்கிக் கிடக்கும் மலையகச் சொந்தங்கள் அழகியநடிகைகளைக் கண்டால் உற்சாகமடைந்து கடுமையாக உழைக்கக்கூடும் என்று நினைத்தோ என்னவோ அவர் அந்த நடிகைகளை அழைத்து வந்திருந்தார். அவர்களும் தங்கள் பங்குக்கு விழா மேடையில் ஜீவனைப் புகழ்ந்து தள்ளிவிட்டார்கள்.

நடிகை ஐஸ்வர்யா ராஜேஸ் ஒருபடி மேலேபோய் "இப்படி ஒரு இளம்அமைச்சர்எங்களுக்கெல்லாம் இல்லையே..." என்று மேடையிலேயே கவலைப்பட்டார். பார்த்துக் கொண்டிருந்தஎந்தஅரசியல்வாதிக்கு இதுவயிற்றெரிச்சலைக்கிளப்பியதோ தெரியவில்லைஒருஇளம்அமைச்சர் இளம் நடிகைகளை அழைத்து வந்து மக்களுக்குக் காட்டியதை பெரும் சர்ச்சையாக்கிவிட்டார்கள்.

அமைச்சர்கள்அரசியல்வாதிகள் என்றைக்கும்தங்கள்நலனுக்காகவா எதையாவது செய்வார்கள்? அவர்கள்மக்கள்நலனுக்காகத்தான் எல்லாவற்றையுமே செய்வார்கள். மகிந்தவும் ஆளும் தரப்பு அரசியல்வாதிகளும் நள்ளிரவில் நடுக்கடலுக்குப்போனால், அதுஎன்ன களியாட்டத்திற்காகவாபோகிறார்கள்? அவர்கள் ஆய்வு செய்யத்தான் போகின்றார்கள். இதையெல்லாம் புரிந்துகொள்ளாமல் இதுபோன்ற "மக்கள் நலச் செயல்திட்டங்களை" அரசியலாக்கி காழ்ப்புணர்வோடு செயற்படுவதே இன்று பலருக்கும் அரசியலாகிவிட்டது.

அதுபோன்றே அழகிய 4 நடிகைகளை ஒன்றாக அமைச்சர் ஜீவனின்அருகில்பார்த்துப்பொறுக்க முடியாது பொங்கிய யாரோ கிளப்பி விட்டதில்பாவம்அமைச்சர்மக்களுக் காகத்தான்நடிக்கைகளைஅழைத்து வந்தேன் என்று விளக்கமெல்லாம் கொடுத்து எக்ஸ் தளத்தில் அறிக்கை விடவேண்டியவராகிப் போனார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாடாளுமன்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்டது.

இதன் பின்னர், குழு நிலையில் திருத்தங்கள் முன் வைக்கப்பட்டதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடியால் சட்டமூலத்தின் 36ஆவது பிரிவு தொடர்பில் முன்வைக்கப்பட்ட திருத் தத்துக்கு வாக்கெடுப்பும் நடத்தப் பட்டது.

இதற்கு நடத்தப்பட்ட வாக் கெடுப்பில் குறித்த திருத்தத்துக்கு ஆதரவாக 51 வாக்குகளும், எதிராக 92 வாக்குகளும் அளிக்கப்பட்டு 41 மேலதிக வாக்குகளால் இந்தத் திருத் தம் தோற்கடிக்கப்பட்டது. இத னையடுத்து நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் மூன்றாவது மதிப் பீடு வாக்கெடுப்பின்றி நிறைவேற் றப்பட்டது.

நிறைவேற்றப்பட்டசட்டமூலத்தில் பிரதியில்சபாநாயகர்கையெழுத்திடும் தினம் முதல் அது சட்டமாக நடை முறைக்கு வரும்.

## மாடுகளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தில் வவுனியாவை சேர்ந்த 50 வயதுடைய திருமணி திருச்செல்வம் என்பவர் உயிரிழந்தார். மேலும் 8 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஐவர் கிளிநொச்சி வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்தில் 8 மாடுகளும் உயிரிழந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் அந்த பாரதூரமான ஜனநாயகவிரோதசெயல்பாடுகளை செயற்படுத்துகின்றசட்டத்தைத்தான் நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதேயாகும்.

இவ்வாறுதமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் சம்பந்தமான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நிகழ்நிலை காப்பு சட்ட மூலத்தில் மாற்றங்கள் கொண் டுவரப்படுவதாக இருந்தால் அந்த மாற்றங்கள்துறைசார்மேற்பார்வை குழுவுக்கு அனுப்பப்பட்டு அந்த குழு அந்த மாற்றங்களை சரியாக ஆய்வு செய்து அதுதொடர்பாக ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு அந்த அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் அந்தஅறிக்கைபாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற வரைக்கும் அந்த சட்டமூலம் தொடர்பாக வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்றும் நிலையியற் கட்டளை 50.2 சரத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை என்னும் பெயரில் நாடாளுமன்றத்துக்குச் சமர்பிக்கப்பட்டுள்ள ஆவணத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது, அந்த ஆவணம் அறிக்கை அல்ல என்றும் அந்த அறிக்கை ஜனவரி 23 சமர்ப்பிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சமர்ப்பிக்கப்படும் என்று குறிப்பிட்ட அறிக்கை இதுவரைக்கும் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப் படாத நிலையில்தான் இன்று இந்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வரப்போகும் உண்மையான சட்டத்தில் இருக்கப்போகும் விடயங்கள் எல்லாமே மூடி மறைக்கப்பட்டு ஒரு இருண்ட நிலையில்தான் இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தச் சட்ட மூலத்தின் 56 சரத்துக்களில் 34 சரத்துக்கள் திருத்தப்படவேண்டும் என்று உயர் நீதிமன்றத்தால் சொல்லப்பட்டுள்ளது. அதற்குமேலதிகமாக ஆளும்தரப்பே நியமித்த நிபுணர்கள் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் மேலதிகமான சரத்துக்களும் திருத்தப்பட்டு 42 சரத்துக்கள் இந்தச் சட்டமூலத்தில்திருத்தப்படவேண்டிய நிலையில், அந்தத் திருத்தங்கள் செய்யப்படாமலேயேஇந்தவிவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

உலகத்தில் மிகமும் மதிக்கப் படுகின்ற ரெக் அமைப்புகளுடைய கூட்டான ஆசிய இணைய குழு சிங்கப்பூரில் உள்ளது.

நேற்று இந்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் அமைச்சர் குறிப்பிடும் போது - ரெக் அமைப்பினுடைய அனுசரணையோடுதான் இந்த சட்டமூலம் இன்று சமர்ப் பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட் டிருந்தார். அவரது அந்தக்கருத்துக்கு ரெக் அமைப்பு அறிக்கை ஒன்றை விட்டிருக்கிறது.

இந்த சட்டமூலம் இப்போது இருக்கும் வடிவத்தில் நிறைவேற் றப்பட்டால் அது பெருமளவுக்கு ரெக் அமைப்புக்கள் இலங்கையில் தொடர்பு வைத்திருப்பதைத் தடுக்கும் என்றும், இவ்விடயம் கடும் எதிர்ப்பை உருவாக்கும் என்றும் தமது அமைப்பு சமர்ப்பித்த மாற்றங்கள் அனைத்தையும் உள்வாங்கினால் மட்டுமே சர்வதேச மட்டத்தில் இந்த சட்டமூலம் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், இப்போதைக்கு இருக்கக்கூடிய சட்டமூலத்தைதாங்கள்எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது என்றும் அந்த அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அப்படியாயின், ஏற்கனவே 56 சரத்துக்களில் 42 சரத்துக்களை திருத்த வேண்டும் என்ற நிலை இருக்கையில் அதுவும் அமைச்சரே இந்த ரெக் அமைப்பினுடைய குழு வழங்கிய திருத்தங்கள் பெறுமதியானவை என்றும், அவை எதிர்காலத்தில் திருத்தங்கள் ஊடாகக் கொண்டுவரப்படும் என்றும் தனது உரையில் சொல்லியிருக்கும் நிலையிலும், இதில் பெரும் குறைபாடுகள்உள்ளதுஎன்பதையும் அமைச்சரேஏற்றுக்கொண்டிருக்கும் நிலையிலும்தான், இந்த சட்டமூலம் குறைபாடுடைய சட்டமூலம் பற்றி அமைச்சரே பேசுகிறார்.

பெரும் குறைபாடுகள் இருக்கத்தக்கதாக இந்த சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு என்ன அவசரம் ஏற்பட்டுள்ளது? என்பதே இப்போதுள்ள கேள்வி யாகும்.

ஏற்கனவே சர்வதேச மட்டத்தில் உதவி கேட்டுக்கொண்டிருக்கும் சிறிலங்காவுக்கு, அந்த சர்வதேச அமைப்புக்களினுடைய உதவிகள் வராமல் பண்ணுவதற்கு வழியேற் படுத்தப்போகின்ற ஆபத்துக்கள் உள்ள நிலையிலும், இந்தச் சட்ட மூலத்தை அவசர அவசரமாக ஏன் நிறைவேற்றுகின்றீர்கள் என்றால் - இது பாரதூரமான ஜனநாயகத்தை மறுக்கக்கூடிய சட்டமூலம் என்று விமர்சனங்கள் இருக்கக் கூடியதா கவே அவசரமாகவே நிறைவேற் றுவதற்கு நீங்கள் விரும்புகிறீர்கள் என்றால், அதற்கு காரணம் நீங்கள் அந்த பாரதூரமான ஜனநாயக விரோத செயல்பாடுகளை செயற்படுத்துகின்றசட்டத்தைத்தான் நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதே யாகும்.

அப்படிப்பட்ட சட்டமூலத்தைக் கொண்டு வந்தால்தான் மக்க ளால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு ஜனாதிபதியும், மக்களால் நிராகரிக் கப்பட்ட அமைச்சரும், மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள இந்தசபையும், மக்களின் உண்மையானகருத்துக் களை வெளிவராமல் தடுத்து - உண்மையான விவாதங்கள் நடத்துவதற்கு அனுமதிக்காமல் இறுக்கி - அடுத்த தேர்தலுக்கு முகங்கொடுக்க முடியும். இதுதான் ஆளும் தரப்பினரின் எண்ணம்.

அப்படிப்பட்ட இருண்ட யுகத்தை உருவாக்கி அடுத்த தேர்த லுக்கு முகங்கொடுத்தால் நீங்கள் வென்றுவிடலாம் என்று கருதுகிறீர்கள். ஆனால் - அது நிச்சயமாக நடக்காது.

நேற்று முன்தினம் ஒரு ஆய்வு மையம் நடத்திய ஒரு கூட்டத்துக்கு நான் சென்றிருந்தேன். அங்கே அரச தரப்பின் முக்கியஸ்தர்களும், எதிர்கட்சிகளின் முக்கியஸ்தர்களும் கூட வந்திருந்தனர்.

அங்கே நாட்டு மக்கள் மிகப் பெருமளவில் மதிக்கின்ற கல்வி மான்கள் அதில் பங்கேற்றிருந் தனர். அந்த சிவில் சமூகத் தலைவர்கள்எக்காரணம்கொண்டும், தீவிரவாதப் போக்கு டையவர் களோஅல்லதுபொறுப்பற்றவர்களோ அல்லது குழப்பவாதிகளோ என்று சொல்லக்கூடியவர்கள் அல்லர். மாறாக - மிக நிதானமாகவே தமது கருத்துக்களை தெரிவிப்பவர்கள்.

எக்காரணம் கொண்டும் தேவையற்றகுழப்பங்களைஏற்படுத் தும் விதமாக செயற்படுபவர்கள் அல்லர். எக்காரணம் கொண்டும் தேர்தல் அரசியலிலோ கட்சி அரசியலிலோ ஈடுபடுபவர்களும் அல்லர். அப்படிப்பட்டவர்களே - இன்றைக்கு இந்த நாட்டில் ஜனநாயகத்தை திட்டமிட்டு மறுதலிக்கின்ற மற்றும் இல்லாமல் செய்கின்ற செயற்பாடுகள்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதனுடைய முக்கியமான விடயமாகவே இந்த நிகழ்நிலைக் காப்பு சட்டமூலமும் அமைந்துள்ளது என்று தெரிவிக்கிறார்கள்.

ஆகவே - இவ்வளவு தூரத்துக்கு கண்டனங்கள் உள்ள நிலையில், சர்வதேசசமூகத்தின் உதவிகளைத் தேடிக்கொண்டிருக்கும் ஒரு நாடு, அதே சர்வதேச சமூகத்தைப் பகைக்கின்ற வகையில் இந்த சட்டமூலத்தை திருத்தாமல் நிறைவேற்றுவது இந்த ஆளும் தரப்பு தன்னுடைய இருப்பையும் தன்னுடைய நலன்களையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கை மட்டுமே.

அந்த வகையில் மிகவும் இருண்ட யுகத்தை எதிர்காலத்தில் ஏற்படுத்துகின்றவகையில் இவர்கள் செயற்படப்போகின்றார்கள் என்பதே இதன் மூலம் நிரூபிக்கப்படுகின்றது. இதற்காக மக்கள் தக்க பாடத்தை இவர்களுக்கு வழங்குவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது - என்றார்.

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து மனுக்களின் பிரதிகளும் எனக்குக் கிடைத்திருக்கின்றன - என்று அவர் தெரிவித்தார்.

## நிறைவேற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை நிறைவேற்றினாலும் அது சட்டமாகாது.

விவாதத்தினை ஆரம்பித்ததன் பின்னரே அது தொடர்பான ஆவணம் கிடைத்தது. தற்போது ஒரே இரவில் அதனை நிறைவேற்ற முயற்சிக்கின்றீர்கள். ஆனால் உயர்நீதிமன்றத்தின் விளக்கத்துக்கு அமைவாகவே இதனை முன்னெடுத்திருக்க முடியும்.

உயர்நீதிமன்றத்தின் விளக்கத்துக்கு எதிராக இதனை நிறைவேற்றுவது மிகவும் பாரதூரமான விடயமாகும். ஆகவே நாடாளுமன்றத்தில் இதனை நிறைவேற்றினாலும் அது சட்டமாக இருக்காது என்றார்.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சட்டம், 2024 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மத்தியஸ்த சபை (திருத்தச்) சட்டம், 2024 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டம் மற்றும் 2024 ஆம் ஆண் டின் 4 ஆம் இலக்க மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமாக நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.



# வடக்கு, கிழக்கில் பெருமளவில் காணிகள் ஓரிரு மாதங்களுக்குள் விடுக்கப்படுமாம்

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் எதிர்பார்ப்பு



மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில் முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் உள்ளிட்ட மாவட்டங்களில் தலா 20 ஆயிரம் ஹெக்டேயர்களுக்கும் மேற்பட்ட காணிகள் எதிர்வரும் ஓரிரு மாதங்களுக்குள் விடுவிக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு விற்பனையின் போது 60 வீத இலாபம் கிடைக்கப்பெறுகிறது. ஆனாலும் சில இடைத்தரகர்களால் அதில் இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

இதனைத் தடுப்பதற்கான முயற்சிகளை விவசாய அமைச்சு முன்னெடுத்து வருகிறது. விவசாயிகளிடமிருந்து நேரடியாக மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இளைஞர், யுவதிகளின் வெளியேற்றத்தைத் தவிர்ப்பதற்காக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. குறிப்பாக 1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பாரிய காணிகள் வனஜீவராசிகள் திணைக்களம் வசப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை விடுவிப்பதற்கு அதாவது அடர்ந்த காடுகளாக இல்லாத காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 85 சதவீதம் சாதகமான நிலைமையிலேயே உள்ளது. எதிர்வரும் ஓரிரு மாதங்களுக்குள் அவை விடுவிக்கப்படும் சாத்தியம் காணப்படுகிறது. எவ்வாறிருப்பினும் அதன் பின்னர் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு எமக்கு ஆளணி தேவைப்படும். எனவே விவசாயம் மற்றும் சுற்றுலாவை அடிப்படையாகக் கொண்டு இளைஞர், யுவதிகளைக் கவர்வதற்கு முயற்சிக்கின்றோம்.

கடந்த ஆண்டு ஜனாதிபதி வடக்கு மற்றும் கிழக்கிற்கு விஜயம் செய்த போது மாவட்ட ஒருங்கிணைப்பு குழு, பிரதேச ஒருங்கிணைப்பு குழு என்பவற்றின் ஊடாக காணி விடுவிப்பிற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம். அந்த பகுதிகளில் விவசாயக்காணிகள் இன்றியும் தோட்டக்காணிகள் இன்றியும் பல இளைஞர், யுவதிகள் இருக்கின்றனர். அவர்களுக்கு காணிகளைவழங்குவதற்கானநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 24 ஆயிரம் ஹெக்டேயர் காணிகளும் வவுனியாவில் சுமார் 20 ஆயிரம் ஹெக்டேயர் காணிகளும் விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றை விவசாயம் மற்றும் குடியேற்றங்களுக்காக விடுவிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். - என்றார். (05)

# அரசின் இருப்பை பாதுகாக்கவே நிகழ்நிலை காப்புச் சட்டமூலம்

## ரவூப் ஹக்கீம் சபையில் எடுத்துரைப்பு



சமூகவலைத்தளங்கள் ஊடாக அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களைத் தடுத்து அரசாங்கத்தின் இருப்பைப் பாதுகாத்துக்கொள்ளும் துரும்பாகவே நிகழ்நிலை காப்புச்சட்டமூலத்தை அரசாங்கம் பயன்படுத்த முயற்சிக்கிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உத்ததேச நிகழ்நிலைக்காப்புச்சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

சமூகவலைத் தளங்களில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக வெளியிடப்படும் மோசமான விடயங்களில் இருந்து மக்களைப்; பாதுகாப்பதற்கே நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தைக் கொண்டுவருவதாக அரசாங்கம் தெரிவிக்கிறது.

ஆனால் இதனைக் காரணம் காட்டிக்கொண்டு அரசாங்கத்தின் இருப்பைப் பாதுகாத்துக்கொள்ள இந்த சட்டமூலத்தை அரசாங்கம் துரும்பாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பதாகவே எமக்குத் தெரிகிறது.

சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக வெளியிடப்படும் மோசமான விடயங்களைத் தடுப்பதற்கு இந்த சட்டமூலத்தைக் கொண்டுவருவதாக அரசாங்கம் தெரிவித்தாலும் சட்டமூலத்தில் உள்ள 57 பிரிவுகளில் 2 பிரிவுகளில் மாத்திரமே பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏனைய அனைத்து விடயங்களும் வலைத்தளங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் வலைத்தளங்கள் ஊடாகத் தகவல் பரிமாற்றிக்கொள்ளும் மத்தியில், அரசியல் நோக்கில் தங்களுக்கு எதிராக விமர்சனங்கள் வரும்போது அதனையும் கட்டுப்படுத்தும் முயற்சியாகவே இதனை நாங்கள் பார்க்கிறோம். இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் நீண்ட கலந்துரையாடல் சென்றது.

அத்துடன் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் இன்று மக்களை நெருக்கடிக்கு ஆளாக்கி இருக்கிறது. அதனால் அரசாங்கத்துக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் எழும் விமர்சனங்களை அடக்குவதற்கான நடவடிக்கையாகவே இதனை நாங்கள் பார்க்கிறோம். இது ஜனநாயக விரோத செயலாகும்.

அதேபோன்று அரசாங்கம் மக்கள் போராட்டத்துக்கு பயப்படுகிறது.

அதனால் அவசரமாக இந்த சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டுவருகிறது. இந்த சட்டமூலம் ஊடாக அரசாங்கம் பாதுகாக்கப்படுகிறது. அதனால்தான் நாங்கள் இதனை எதிர்க்கிறோம். - என்றார். (05)

# பௌத்ததேரரின் கொலைக்கு பயன்படுத்திய சொகுசு கார் எரியூட்டப்பட்ட நிலையில் மீட்பு





சொகுசு காரில் வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் கம்பஹா, ஹேனேகம பிரதேசத்திலுள்ள விகாரையின் கலபாலுவாவே தம்மரத்ன தேரர் (வயது - 45) உயிழந் தார். ஹேனேகம பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் இவர் வசித்து வந்தார் எனவும், அந்த விகாரையின் காணி தொடர்பிலான பிரச்சினை காரணமாக மல்வத்துஹிரிபிட்டிய விகாரைக்கு வந்து அன்னதானம் வழங்கியமையும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சொகுசு காரில் வந்த இனந்தெரியாத நால்வர், தாம் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் எனவும் தமக்குக் கிடைத்த தகவலின் பேரில் சோதனையிட வந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் சோதனையிடுவது போன்று நடித்து இரண்டு முறை துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், கலபாலுவாவே தம்மரதன தேரரின் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சொகுசு கார் எரியூட்டப்பட்ட நிலையில், நவகமுவ பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (05)

# கச்சத்தீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கு அழைப்பு விடுக்கக்கோரி தமிழகத்திலிருந்து கடிதம்

இந்திய பாரம்பரிய கத்தோலிக்க மீனவர்களின் உணர்வுக்கு மதிப்பளித்து கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழாவுக்கு இலங்கை கத்தோலிக்க திருச்சபையானது கச்சத்தீவு பாரம்பரிய திருப்பயண குழுவுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும் என்று எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா, தமிழ்நாடு - இராமநாதபுரம் கச்சத்தீவு பாரம்பரிய நாட்டுப்படகு திருப்பயண குழுவால் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ்.மறை மாவட்ட ஆயர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

1974 ஆண்டு ஒப்பந்தப்படி கச்சத்தீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும், இந்திய பாராம்பரிய மீனவர்களின் வழிபாட்டு உரிமையை பாதுகாக்கும் நோக்கத்தில், கச்சத்தீவு ஒப்பந்தத்தில் உள்ள 5 ஆவது சரத்தில், கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழாவிற்கு பாரம்பரிய மீனவர்கள் விசா உள்ளிட்ட எந்த அனுமதி இல்லாமல் குடும்பத்துடன் சென்று வழிபடலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் தொடர்ந்து நாட்டுப்படகில் பாரம்பரிய மீனவர்கள் தங்கள் குடும்பங்களுடன், பணம் வாங்காமல் தங்கள் உறவினர்களைத் திருப்பயணிகளாக அழைத்துக் கொண்டு கச்சத்தீவு திருவிழாவுக்கு சென்று வந்தனர். இது சமீபகாலமாக பணம் வாங்கிக் கொண்டு விசைப்படகில் வெளியூரிலிருந்து வரும் திருப்பயணிகளை, சுற்றுலா பயணிகளை போல் அழைத்து வரும் இராமேஸ்வரம் பங்கு பாதிரியாரின் தலைமையிலான கச்சத்தீவு விழா குழுவில் உள்ள சில நபர்களுக்கு இடையூறாக இருந்ததால், கச்சத்தீவு பாரம்பரிய நாட்டுப்படகு திருப்பயனத்தை 2014 ஆண்டு தடை செய்தனர்.

இதை எதிர்த்து பாரம்பரிய மீனவர்கள் தொடர்ந்து போராடினார். கடந்த 2018 ஆண்டு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, கச்சத்தீவு ஒப்பந்தத்தில் உள்ள பாரம்பரிய நாட்டுப்படகு திருப்பயண உரிமையை மீட்டு உறுதிப்படுத்தினர். இதனடிப்படையில் 2019 ஆண்டு முதல் கச்சத்தீவு பாரம்பரிய நாட்டுப்படகு திருப்பயண குழு கச்சத்தீவு திருப்பயணத்தை மேற்கொண்டு வருகிறது. ஆனால் உயர்நீதிமன்ற ஆணையை மத்திய, மாநில அரசுகள் இதுவரை முழுமையாக செயல்படுத்தவில்லை.

இதுகுறித்து அரசு அதிகாரிகளிடம் விசாரித்ததில், இலங்கை யாழ்ப்பாண ஆயர் இராமேஸ்வரம் பாதிரியாருக்கு மட்டும் தான் கச்சத்தீவு திருவிழா அழைப்பு கடிதம் அனுப்பி உ ள்ளார், எனவே அவர்களை மட்டுமே அங்கீகரிக்க முடியும் என அதிகாரிகள் கூறுகிறார்கள்.

கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா இருநாட்டு பாரம்பரிய கத்தோலிக்க மக்களின் நம்பிக்கை, கலாசாரம் மற்றும் பண்பாடு சம்பந்தப்பட்டது. எனவே இருநாட்டு பாரம்பரிய மீனவர்களின் நம்பிக்கை மற்றும் கலாச்சாரத்திற்கு கத்தோலிக்க திருச்சபை மதிப்பளிக்க வேண்டும். பாரம்பரிய கத்தோலிக்க மீனவர்களின் உரிமையை கத்தோலிக்க திருச்சபை புறக்கணிக்க கூடாது.

எனவே இந்த ஆண்டு இந்திய பாரம்பரிய கத்தோலிக்க மீனவர்களின் உணர்வுக்கு இலங்கை கத்தோலிக்க திருச்சபை மதிப்பளிக்கும் வகையில் கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா அழைப்பிதழை கச்சத்தீவு பாரம்பரிய திருப்பயண குழுவுக்கும் அனுப்பவேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். (05)

# வவுனியாவில் இருந்து மட்டுவுக்கு கஞ்சா கடத்திய நால்வர் கைது

வவுனியாவில் இருந்து மோட்டார் சைக்கிளில் மட்டக்களப்பு களுவாஞ் சிக்குடிக்கு 845 கிராம் கஞ்சா போதைப்பொருளை கடத்தி சென்ற வியாபாரிகளிடம் கஞ்சா வாங்க சென்ற வியாபாரிகள் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை களுவாஞ்சிக்குடியில் வைத்து கைது செய்ததுடன் ஒரு மோட்டார்சைக்கிள் ஒரு முச்சக்கரவண்டி ஆகியவற்றை கைப்பற்றியுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலாக குழுவினர் களுவாஞ்சிக்குடி கடற்கரையில் சம்பவதினமான திங்கட்கிழமை மாலை கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதன்போது அந்த பகுதியில் ஓட்டோ ஒன்றில் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தைச் சேர்ந்த இரு வியாபாரிகள் சென்று காத்துக் கொண்டிருந்த நிலையில் வவுனியாவில் இருந்து மோட்டர்சைக்கிள் ஒன்றில் கஞ்சாவை கடத்தி வந்த இருவர் காத்திருந்த வியாபரிகளிடம் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவர்களைக் கண்காணிப்பில் மாறு வேடத்தில் இருந்த பொலிஸார் சுற்றி வளைத்து மடக்கிபிடித்து 4 பேரை கைது செய்ததுடன் 845 கிராம் கஞ்சா கடத்தலுக்குப் பயன்படுத்திய மோட் டார் சைக்கிள் ஒன்று ஓட்டேர ஒன்று என்பவற்றை மீட்டனர். இதில் கைது செய் யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உலை வாயை மூடலாம்....

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பின் பெரும்பான்மைப் பலம் மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டமூலத்திற்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பலத்த எதிர்ப்பு இருந்தபோதும் ஆளும் தரப்பு அது –குறித்து கவலைப்படாமல் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

நாடாளுமன்றத்தில் இரண்டு நாள்களாக இடம்பெற்ற விவாதங்களில் எதிர்க்கட்சியினர் இந்தச் சட்டமூலத்திற்குத் தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் அரசுக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திர சபை போன்றவற்றின் உறுப்பினர்கள் இந்தச் சட்டமூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தது மட்டுமல்ல, ஆளும் தரப்பு இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முற்பட்ட விதம் குறித்தும் தமது கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர்.

இந்தச் சட்டமூலத்தின் பெரும்பான்மையான பகுதிகள் அரசமைப்புச் சட்டத்திற்கு முரணான வகையில் அமைந்திருப்பதாக உயர்நீதிமன்றம் கருத்துத் தெரிவித்த பின்னரும் அவற்றைத் திருத்தி அது குறித்த தொழில்நுட்ப அறிக்கைகளை நாடாளுமன்றத்திற்குப் போதிய அவகாசத்துடன் முன்வைத்த பின்னர் சட்டமூலத்தை நிறைவேற்றியிருக்கலாம் என்பதே எதிர்க் கட்சிகளின் கருத்தாக இருந்தது. அது நியாயமானதும்கூட.

போதிய கால அவகாசம் எடுத்து, முறைப்படியாகச் செய்யவேண்டிய திருத்தங்களைச் செய்து, சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கூடி ஆராய்ந்து அவசியமான வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு ஆளும் தரப்பினர் முயன்றிருந்தால் அவர்களின் நோக்கத்தில் நேர்மை இருக்கின்றது என்று ஏற்றுக்கொண்டிருக்கலாம். அப்படியில்லாமல் அவசர அவசரமாக, ஏனோ தானோ என்ற போக்கில் முரண்பாடான, பாதகமான, மக்களின் கருத்துச் சுதந்திரத்தை அடக்குகின்ற இந்தச் சட்டத்தை ஆளும் தரப்புக் கொண்டுவரவேண்டிய தேவை என்ன உள்ளது?

இந்தச் சட்டம் மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் அதுவும் தேர்தல்கள் நடக்கவுள்ள நிலையில் அதன் தாக்கம் மிக மோசமானதாக இருக்கும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. தேர்தல்காலத்தில் ஆளும்தரப்புக்கும் ஆட்சியாளர்களுக்கும் எதிரான பரப்புரைக்கு சமூக ஊடகங்கள் பெரிதும் பயன்படுத்தப்படும், அதுவும் மிக மோசமான சித்தரிப்புக்களுக்கு அது பயன்படும் என்கிற அச்சம் காரணமாகவே ஆளும் தரப்பு இவ்வளவு அவசர அவசரமாக இந்தச் சட்டத்தை நிறைவேற்றப் பாடுபட்டிருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

கடந்த சில தேர்தல்களில் அரசியல்வாதிகள் மீது கடுமையான விமர்சனங்கள் சமூக ஊடகங்கள் மூலமே முன்வைக்கப்பட்டன. இது தேர்தல் வாக்களிப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக ஆளும் தரப்பினர் கருதுவதன் விளைவே இந்தச் சட்டமூலம். ஏற்கனவே தமது செல்வாக்குப் பெருமளவில் சரிந்திருக்கும் தற்போதைய நிலையில் கட்டுப்பாடுகளற்ற ஊடகங்கள் தமக்குப் பெருமளவு நெருக்கடியைத் தோற்றுவிக்கக்கூடும் என்கிற அச்சம் இதுபோன்று அவசர அவசரமாக ஒரு அரைகுறைச் சட்டத்தை நிறைவேற்ற ஆளும்தரப்பைத் தூண்டியிருக்கக்கூடும்.

ஆனால், இத்தகைய சட்டங்களால் மட்டும் மக்களைக் கட்டுப்படுத்திவிட முடியும் என்று நினைப்பது அபத்தமானது. தமிழில் ஒரு சொலவடையுண்டு. உலை வாயை மூடலாம்; ஊர் வாயை மூடமுடியாது. அதுபோன்றே ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள் மூலம் மக்களின் எண்ணவெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீதும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தமுடியும் என்று ஆளும் தரப்பினர் கருதுவார்களானால் அது வெறும் கனவாக மட்டுமே முடியும்.



## தண்ணீர்: கவனியுங்கள்!

**மோகனா**



அன்பின் நண்பர்களே.. நீங்கள் நீர் அருந்த வீட்டிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்லாமல், கடைகளில் இருக்கும் பாட்டில் நீர்தான் சுத்தமானது, சுகாதாரமானது என்ற எண்ணத்தில் பாட்டில் நீர் வாங்குபவர்களா? இதோ உங்கள் முன் வரப்போகும் சில அறிவியல் தகவல்களை, கொஞ்சம் யோசனை செய்து பார்த்துவிட்டு, பின்னர் பாட்டில் நீர் வாங்கிப் பருகுங்கள். இப்போது அம்மாவின் தாய்ப்பாலில் கூட மைக்ரோ பிளாஸ்டிக் இருப்பதாக அறிவியல் கண்டுபிடிப்புகள் உள்ளன. அதேபோல கருவறையில் இருக்கும் கருவிலும், அதன் இரத்தத்திலும் மைக்ரோ பிளாஸ்டிக் உள்ளதாக கண்டுபிடித்து உள்ளனர்.

பாட்டில் நீரில் நீந்தும் மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் மற்றும் நானோ பிளாஸ்டிக்ஸ் பற்றி அறிவீர்களா? நீங்கள் வாங்கும் ஒரு லிட்டர் பாட்டில் தண்ணீரில் மைக்ரோபிளாஸ்டிக்ஸ் மற்றும் நானோபிளாஸ்டிக்ஸ் அழகாக நீந்திக்கொண்டு இருக்கிறது. இந்த உண்மை உங்களுக்குத் தெரியுமா? அமெரிக்க ஆராய்ச்சியாளர்களின் புதிய ஆய்வின்படி, பாட்டிலில் அடைக்கப்பட்ட நீர் முன்பு நாம் நினைத்ததை விட அதிக அளவில் மைக்ரோபிளாஸ்டிக்ஸ் மற்றும் சிறிய நானோ பிளாஸ்டிக்களால் நிரப்பப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்துள்ளனர்.

### பாட்டில் தயாரிப்பில் இணையும் வேதிப்பொருட்கள்

பாட்டில்கள் மற்றும் செயலாக்கம் ஆகிய இரண்டிலும் குழாய் தண்ணீரை விட பாட்டில் தண்ணீரில் அதிக மைக்ரோபிளாஸ்டிக் உள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் பிஎன்ஏஎஸ் (PNAS) இல் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வு, பழைய மதிப்பீடுகளை விட 10 முதல் 100 மடங்கு அதிகமான மைக்ரோபிளாஸ்டிக் உள்ளதைக் கண்டுபிடிக்க புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளது.

### பிளாஸ்டிக் துணுக்குகளின் அளவு..

இவை மிக மிகச் சிறியவை. இந்த பிளாஸ்டிக் துண்டுகள், 5 மிமீஐ விட சிறியவை. பொதுவாக அவற்றைக் கையால் கணக்கிடப்படுகின்றன. அவற்றைக் கண்டறிதல் ஒரு கடினமான செயலாகும். நானோ பிளாஸ்டிக்குகள் என்பவை மைக்ரோ பிளாஸ்டிக்குகளை விட மிகவும் சிறியவை. ஒரு மைக்ரோமீட்டரை விட சிறியதாக இருக்கும் நானோ பிளாஸ்டிக்குகள், மனித இரத்த சிவப்பணுவின் தடிமன் அளவு இருக்கும். அவற்றை கண்காணிப்பது இன்னும் கடினம்.

### ஆய்வின் முறை: தூண்டப்பட்ட ராமன் சிதறல் நுண்ணோக்கி

இந்த பாட்டில் நீரை ஆய்வு செய்பவர்கள் தூண்டப்பட்ட ராமன் சிதறல் நுண்ணோக்கி என்ற நுட்பத்தை உருவாக்கினர். இது கணினி வழிமுறைகளுடன் இணைந்து, மைக்ரோபிளாஸ்டிக்ஸை வேகமாக அடையாளம்/கண்டுபிடிக்க உதவுகிறது.

லேசர்களால் கண்டறியப்பட்ட பாலிஸ்டிரீன் பிளாஸ்டிக்கின் (polystyrene plastic) மிகச் சிறிய துணுக்குகள், ஒவ்வொன்றும் சுமார் 200 நானோமீட்டர்கள் அல்லது ஒரு மீட்டரில் 200 பில்லியன் துணுக்குகள்.. அதாவது ஒரு மீட்டரை பில்லியன் துண்டுகளாகப் போட்டால் (ஒரு பில்லியன் என்பது : 100,00,00,000) ஒரு மிக மிகச் சின்ன துணுக்கு, கண்களால் பார்க்கவே முடியாது.

கடையில் உள்ள பாட்டில்களில் மைக்ரோ அன்ட் நானோ பிளாஸ்டிக்குகள் பெட்டிக்கடையின் அடுக்குகளில், அல்லது குளிர் சாதனப்பெட்டியில் வைத்து இருந்த 3 வாட்டர் பிராண்டுகளை சோதித்த பிறகு, ஒரு லிட்டர் பாட்டில் தண்ணீரில் சராசரியாக 2,40,000 பிளாஸ்டிக் துண்டுகள் இருப்பதைக் கண்டறிந்தனர். அதன் செறிவுகள் பிராண்டுக்குத் தகுந்தபடி லிட்டருக்கு 1,10,000 துண்டுகள் முதல் லிட்டருக்கு 3,70,000 துண்டுகள் வரை இருந்தன. இந்த துண்டுகளில் பெரும்பாலானவை 90% நானோபிளாஸ்டிக்ஸ், மீதமுள்ள 10% மைக்ரோபிளாஸ்டிக்ஸ்.

### கொலம்பியா பல்கலைக்கழக நைக்சின் கருத்து

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் வேதியியலில் பட்டதாரி மாணவரான முன்னணி எழுத்தாளர் நைக்சின்கியான்கூறுகையில், இவ்வளவுதுகள்களைக் கண்டுபிடிப்பது முற்றிலும் எதிர்பாராதது அல்ல. சிறிய வியங்கள் கிடைக்கின்றன, அவற்றில் அதிகமானவை உள்ளன என்பதே யோசனை. அவற்றைக் கண்காணிப்பது மிகவும் கடினமாக இருப்பதால், மைக்ரோபிளாஸ்டிக்ஸ் மற்றும் குறிப்பாக நானோ பிளாஸ்டிக்கின் ஆரோக்கிய விளைவுகள் மக்களால் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை.

(9ஆம் பக்கம் பார்க்க...)



காலைக்கதிர் Kalaikkathir

# சங்குமண்கண்டி காட்டுப் பிள்ளையார் புதிய ஆலயத்திற்கு நேற்று அடிக்கல்









(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் பழமையும் வரலாறும் கொண்ட தாண்டியடி, சங்கமன்கண்டி காட்டுப்பிள்ளையாருக்கு அதேயிடத்தில் புதிய ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வானது நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது.

பஞ்சபூதங்களின் ஆசீர் வாதத்துடன்னும் பக்தர்களின் அரோகரா கோங்களுடன் காலை 9.40 முதல் 10.50 வரையான சுப வேளையில் அடிக்கல் நடப்பட்டது.

இந்தநிகழ்வுகள்யாவும்ஆலயநிர்வாகசபையினர் மற்றும் ஆலய தலைவர் த.முருகானந்தராசா தலைமையில் நிகழ்த்தப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆலயத் தலைவரினால் பிரதான அடிக்கல் எடுத்துச் செல்லப்பட்டு சாம ஸ்ரீ தேசமான்ய சிவாச்சாரியார் திலகம் அகோர சிவாச்சாரியார் சிவப்பிரம்ம ஸ்ரீ சி.கு.கணேஸசமூர்த்திஸ்வர குருக்களினால் ஆலய வளாகத்தில் நடப்பட்டது...

ஆசி உரை சாம ஸ்ரீ தேசகீர்த்தி ஈசான சிவாச்சாரியார் சிவப்பிரம்ம ஸ்ரீ .கணேசதிவிசாந்த குருக்களினால் நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிகச்செயலர் வே.ஜெகதீசன் மற்றும் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து கொண்டனர். திருக்கோவில் பிரதேச செயலக கலாச்சார அபிவருத்தி உத்தியோத்தர் நிாந்தினி மற்றும் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் ,திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களின் நிர்வாகத்தினர் , ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் விரும்பிகள் என பலரும் இவ் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# டிரான் நாடாளுமன்றில் தெரிவித்தமையை நிராகரித்தது ஆசிய இணைய கூட்டமைப்பு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நாடாளுமன்றத்தில் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் குறித்த விவாதத்தில் வெளியிட்ட கருத்துக்களை நிராகரித்துள்ள ஆசிய இணைய கூட்டமைப்பு, நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் அதன் தற்போதைய வடிவத்தில் முன்னெடுக்க முடியாது. மேலும் இலங்கையின் டிஜிற்றல் பொருளாதாரத்தின் சாத்தியமானன வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு முதலீட்டைப் பாதிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

உலகின் மிகவும் வலுவான இணைய தொழில்நுட்ப நிறுவனங்களை உள்ளடக்கிய அமைப்பே ஆசிய இணைய கூட்டமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அமைப்பு ஆசிய பிராந்தியத்தில் இணையம் தொடர்பான விடயங்களிற்கு தீர்வை காணவும் ஊக்குவிக்கவும் முயல்கின்றது.

ஆசிய இணையகூட்டமைப்பு அப்பிள் பின்ரெஸ்ட் கூகுள் ருவிட்டர் உட்பட பல நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்களை நிராகரிக்கவும் பதிலளிக்கவும் விரும்புகின்றோம் என ஆசிய இணைய கூட்டமைப்பின் முகாமைத்துவ பணிப்பாளர் ஜெவ்பெய்ன் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலத்தை முன்னெடுக்கும் செயற்பாடுகளின் போது நாங்கள் வழங்கிய குறிப்பிடத்தக்க பங்களிப்பை அமைச்சரின் உரை அங்கீகரிக்கவில்லை - எங்கள் அமைப்பு பரிந்துரைகளை முன்வைத்திருந்ததுடன் சிங்கப்பூரில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதிகளை சந்தித்திருந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# கச்சத்தீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவில் 8 ஆயிரம் பக்தர்களுக்கு அனுமதி

கச்சத்தீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா முன்னேற்பாட்டுக் கூட்டம் யாழ்.மாவட்ட செயலர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் கச்சத்தீவு அந்தோனியார் ஆலய வருடாந்த மகோற்வம் சிறப்பாக இடம் பெறவுள்ள நிலையில் குறித்த ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயும் முன்னேற்பாட்டு கூட்டத்தில், இவ்வருடம் இலங்கையிலிருந்து 4000 பக்தர்களும் இந்தியாவில் இருந்து 4000 பக்தர்களும் பங்குபற்ற அனுமதிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பங்குபற்றுவோருக்கான சுகாதாரம்,போக்குவரத்துஉட்படஅடிப்படை வசதிகள், பாதுகாப்பு, ஏற்பாடுகள் மற்றும் உணவு போன்ற பல்வேறு பட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

குறித்த முன்னாயத்த கூட்டத்தில் யாழ்.இந்திய துணைத் தூதுவராலய அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலர், நெடுந்தீவு பங்குத்தந்தை, யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர், கடற்படையின் பிராந்திய பொறுப்பதிகாரி, பொலிஸ் உயரதிகாரிகள், இராணுவ உயரதிகாரிகள் மற்றும் துறை சார் திணைக்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

(05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# யானை, குதிரைகளுடன் நயினாதீவு குடமுழுக்கு விழா நேற்று விமரிசை







அம்மன் ஆலய புனருத்தாரன மஹா குடமுழுக்கு நேற்று புதன்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

அதிகாலை 5 மணி முதல் ஓமகுண்ட கிரியைகள் நடைபெற்று கும்பாபிே-கம் நடந்தேறியது.

பிரதான கும்பம் மற்றும் ஏனைய கும்பங்கள் குருமார்களால் உள் வீதி வெளி வீதியில் எடுத்துச் செல்லப்பட்டு யானை குதிரை என்பன வலம் வந்தன.

கும்பாபிசேகம் நடைபெற்றபோது பெரியளவிலான ட்ரோன் மூலம் ஆலயத்துக்கு பூக்கள் சொரியப்பட்டது.

கும்பாபிசேக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்தனர்.

விசேடமாக யானை, குதிரை என்பன வரவழைக்கப்பட்டு கும்பாபிகேம் சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிசேகத்தை தொடர்ந்து 45 நாட்களுக்கு மண்டலாபிகேம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

# துப்பாக்கிகள், வெடிகுண்டுகளை வைத்திருப்பவர்கள் பற்றிய தகவல்களை வழங்குபர்களுக்குப் பண பரிசில்

சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் வெடி குண்டுகளை வைத்திருப்பவர்கள் பற்றிய தகவல் களை வழங்கும் நபர்களுக்கு பணப் பரிசு வழங்க பொலிஸ் திணைக்களம் தீர்மானித் துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது பலரும் கைது செய்யப்பட்டமை தொடர்பில் தகவல் வழங்கும் நபர்களுக்கும் பண பரிசில் வழங்க பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இவ்வாறு தகவல் வழங்குவோர் பற்றிய விவரங்கள் இரகசியமாகப் பேணப்படும் எனவும் அவர் தெரிவி த்துள்ளார். (05)

# விஸ்வ புத்தருக்கு மீண்டும் மறியல்

'விஸ்வ புத்தர்' என்ற தேரரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு கொழும்பு மேலதிக நீதிவான் நிதிம ன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதன்கிழமை நீதிமன்றில் இவர் ஆஜர்படுத்தப்பட்ட போது கொழும்பு மேலதிக நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

மேலும் சந்தேக நபரை எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

'விஸ்வ புத்தர்' என்று தன்னை அடையாளப்படுத்தி இவர் கடந்த வாரம் குற்றப்புலனாய்வுப்பிரிவினரால்கைதுசெய்யப்பட்டுகங்கொடவிலநீதிவான்நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (05)

# சீனி வரி மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் குற்றப்புலனாய்வு விசாரணைகள் நிறைவு

சீனி வரி மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை நிறைவு செய்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

விசாரணையின் கோப்புகள் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன எனவும் அதற்கான பதில் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மோசடி தொடர்பாக வழக்குத் தொடர்வதற்கான ஆலோசனையைப் பெறவே இவ்வாறு செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 6 நிறுவனங்களிலிருந்து பெற்ற இலாபத்தில் 31 கோடி ரூபாவை மீளப்பெற்றுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

சீனி வரி மோசடி தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (05)

# பெலியத்தவில் ஐவர் கொலை: மாத்தறையில் ஒருவர் கைது

பெலியத்தவில் ஐவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு உடந்தையாக இருந்தார் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறையில் வைத்து அவர் நேற்று (புதன்கிழமை) கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர், தாக்குதல் நடத்தியவர்கள் பயன்படுத்திய வாகனத்தின் சாரதி எனவும் இவரே இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை திட்ட மிட்டுள்ளார் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. (05)

## தேர்தல்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்குப்பதிலாக, நாடாளுமன்றத்தில் உள்ள 225 பேரின் தனிப்பட்ட விருப்பங்களை அடையும் நோக்கில் சட்டம் இயற்றப்பட்டால், இந்நாட்டில் நாடாளுமன்றத்தின் தரம் தொடர்பான பிரச்சினை ஏற்படும் அதனால் நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களின் தனிப்பட்ட விருப்பங்களை விடுத்து, 220 இலட்சம் மக்களின் பொதுவான அபிலாஷைகளைக் கருத்திற் கொண்டு நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை ஆளும் தரப்புத் திரும்பப் பெறவேண்டும்.

அத்துடன் நாடாளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுவும் இந்தச் சட்டமூலத்தில் தனது கடமையைச் சரியாக நிறைவேற்றவில்லை. நவீன ஊடகப் பாரம்பரியத்தை உருவாக்குவதை விடுத்து இளைஞர்களின் உரிமைகளை பறிக்கும் பாரம்பரியத்தைக் கையாண்டு, இவ்வாறான சட்டங்களை நிறைவேற்றி, ஊடக கலாசாரத்தை குழி தோன்டி புதைத்து, நாட்டை கற்காலத்திற்குக் கொண்டு செல்லும் தீர்மானத்தை நிறைவேற்றிய குழுவாகவே இந்தத் துறைசார் மேற்பார்வைக் குழுவை கூறலாம்.

மேலும் ஜனாதிபதித் தேர்தல் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதை அடிப்படையாக்கொண்டே இந்த சட்டமூலம்கொண்டு வரப்பட்டி ருக்கிறது. நாட்டு மக்களின் பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம் மற்றும் ஜனநாயக உரிமையை அழிக்கும் நோக்கிலயே இந்தச் சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தின் மூலம் நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிய டைந்துள்ள நிலையில் இவ்வாறான சட்ட திட்டங்கள் நாடடின் பொருளாதாரத்துக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இதனால் இணையத்தள வசதிகளை வழங்கும் சர்வதேச நிறுவனங்கள் நாட்டை விட்டுச் செல்லும் நிலை இருக்கிறது. இந்த சட்டத்தின் மூலம் அமைச்சருக்கு தன்னிச்சையான அதிகாரம் வழங்கப்படுகிறது.

சமூகவலைத்தளங்களுக்கு ஒழுக்க நெறி இருக்கவேண்டும். கட்டுப்பாடு இருக்கவேண்டும். அதனை அனைவருடன் கலந்துரையாடி முறையாக மேற்கொள்ள வேண்டும். தற்போதுள்ள சட்டம் மூலம் சமூகவலைத்தளங்களை ஒழுங்குபடுத்த முடியும்.

மேலும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் சட்டமன்றம், நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகிய 3 தூண்களோடு புதிய தூணாக நவீன உலகில் கருதப்படும் ஊடகங்கள் இந்த நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தால் கடுமையாகப் பாதிக்கப்படும். இதனால் ஊடக சுதந்திரம் மற்றும் சமூக ஊடக சுதந்திரம் என்பன கட்டுப்படுத்தப்படும். நிறைவேற்றுத்துறை, நீதித்துறை போன்றவற்றில் உள்ள தவறுகளையும் குறைகளையும் சுட்டிக்காட்டும் திறன் ஊடகங்களுக்கும் சமூக ஊடகங்களுக்கும் இருந்தாலும், இந்தச் சட்டத்தின் மூலம் மட்டுப்படுத்தப்படுகிறது.

ஊடக சுதந்திரம் மற்றும் சமூக ஊடக சுதந்திரம் என்பன பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக இந்த சட்டமூலத்தை வாபஸ்பெற்றுக்கொண்டு, அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடி பொருத்தமான முறையில் புதிய சட்ட-மூலத்தைக் கொண்டுவர ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# வீடுகளின் உரிமையை மாற்றும்போது பயனாளி இறந்தால் முழு உரிமையும் வீட்டில் வசிக்கும் வாரிசுகளுக்கு மட்டுமே

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் கீழ் 50,000 வீட்டு உரிமைப் பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவால் இந்த அமைச்சரவைபத்திரம்சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தில், வீட்டு உரிமைப் பத்திரங்களை வழங்கும் போது வீட்டு உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய நொத்தாரிசு கட்டணம், முத்திரைக் கட்டணம் மற்றும் பிறவரிகளுக்கு செலவிடப்படும் தொகை திறைசேரியால் ஏற்கப்படும் என்று பரிந்துரைத்துள்ளது.

மேலும், இந்த வீடுகளின் முழு உரிமையை மாற்றும் போது அசல் பயனாளி இறந்திருந்தால், அந்த வீட்டில் தற்போது வசிக்கும் அவரது வாரிசுகளுக்கு மட்டுமே வீடுகளின் முழு உரிமையும் வழங்கப்பட வேண்டும் என்றும் இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதிஅமைச்சின்அவதானிப்புகளுக்காகவே இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

பல்வேறு நகர திட்டங்களின் கீழ் குறைந்த வருமானம்பெறும்குடும்பங்களுக்குவாடகை அடிப்படையில் வழங்கப்படும் வீடுகளில் இருந்து மாதந்தோறும் ரூ.3000 வசூலிக்கப்படுகிறது. வாடகைப் பணம் வசூலிப்பதை முற்றாக நிறுத்துவதற்கு இந்த அமைச்சரவைப் பத்திரம் முன்மொழிந்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுமார் 70 வீதமான மக்களுக்கு காணி மற்றும் வீட்டு உரிமைப் பத்திரங்களை சட்டரீதியாக வழங்கி காணி மற்றும் வீடுகளின் வாரிசுகளாக்குவது இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கானவரவுசெலவுத்திட்ட முன்மொழிவுக்கு இணங்க இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதுடன், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நகர வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வாடகை அடிப்படையில் வழங்கப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளின் வாடகை வசூலை இடைநிறுத்தி, அந்த அடுக்குமாடி குடியிருப்புகளின் உரிமையை சட்டபூர்வமாக ஒப்படைத்தலாகும்.

நகர அபிவிருத்தி அதிகார சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் சட்ட நிலைகள் தொடர்பில், குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீட்டுப் பத்திரங்களை வழங்குவது தொடர்பாக, சட்டமா அதிபருடன் ஏற்கனவே கலந்துரையாடி தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

இந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு சட்டபூர்வ உறுதிப்பத்திரங்களை வழங்கியதன் பின்னர், குடியிருப்பாளர்களின் பிரதிநிதித்துவத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டு ஆதன முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தால் இந்த வீடுகளின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படும் என அமைச்சரவைப் பத்திரம் மேலும் தெரிவிக்கிறது. (05)

# இலங்கையின் உத்தேச இணையசட்ட மூலம் தேர்தல்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும்

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

இலங்கையின் உத்தேச இணையசட்டம் எதிர்வரும் தேர்தல்களிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி இந்த வாரம் நாடாளுமன்றத்தில் அவசரமாக கொண்டுவர முயற்சிக்கும் அடக்குமுறையானபுதிய இணையசட்டம்நீண்டகால தண்டனையை வழங்க பேச்சுக்கள் கருத்துக்கள் தொடர்பிலான கூடிய பரந்த மற்றும் தெளிவற்ற குற்றங்களை உருவாக்கும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கை இந்த வருடத்தின் பிற்பகுதியில் ஜனாதிபதி நாடாளுமன்ற தேர்தலிற்கு தயாராகிவரும் நிலையில்இந்தசட்டம்கருத்துவெளிப்பாட்டுசுதந்திரத்திற்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது எனவும்சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் என்ற உத்தேச சட்டமூலம் இணையவழி துன்புறுத்தல்கள், மோசடி, துஸ்பிரயோகம் போன்றவற்றிற்குஎதிராக பாதுகாப்பை வழங்குகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அது புதிய இணையவழி பாதுகாப்பு ஆணைக்குழுவை ஏற்படுத்துவதையே பிரதான நோக்கமாக கொண்டுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமிப்பார் குறிப்பிட்ட ஆணைக்குழு இணையத்தில் வெளியாகியுள்ள தவறான பாதகமான தகவல் என தீர்மானித்து அதனை அகற்றலாம் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த ஆணைக்குழு கட்டுப்படுத்தலாம் இணையத்தை பயன்படுத்துவதை தடை செய்யலாம் தனிநபர்கள் அமைப்புகளிற்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கலாம் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட நிபுணர்களிற்கு சந்தேகநபர்களின் வீடுகள் அலுவலகங்களை சோதனையிடுவதற்காக அதிகாரம் வழங்கப்படும் கடும் அபராதம் ஐந்து வருட சிறைத்தண்டனை போன்றவற்றை விதிக்கலாம் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது . (05)

# ஆசிரிய உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குக

## வடிவேல் சுரேஷ் கோரிக்கை



ஆசிரிய உதவியாளர்களுக்குரிய நிரந்தர நியமனம் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும்ஜனாதிபதியின்சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

தொடர்ந்தும் ஆசிரியர் உதவியாளர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பல வருடகாலமாக உதவி ஆசிரியர்களாக பணிபுரிந்தும் கூட அவர்களை நிரந்தர சேவையில் இணைக்காமல் இருப்பதாலும் அவர்களுக்குரிய முறையான கொடுப்பனவு வழங்கப்படாமையாலும் பல இன்னல்களை எதிர் கொண்டுள்ளனர்.

அரசாங்கமும் கல்வி அமைச்சும் ஒன்றிணைந்து உடனடியாக இதற்கு தீர்வு வழங்க வேண்டும். மலையகத்தைப் பொறுத்தவரை ஆசிரியர் வெற்றிடங்கள் பரவலாகக் காணப்படுகின்றது.

அரசாங்கத்தின் ஊடாக 3,000 உதவி ஆசிரியர்களை வெற்றிடங்களுக்கு நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அது வரவேற்கத்தக்க விடயமாக இருந்த போதிலும் தற்சமயம் உதவி ஆசிரியர்களாக சேவை புரிபவர்களின் பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்து வைத்த பின்னரே புதிய நியமனங்களை மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு பொறிமுறை ஒன்றினூடாகவே இந்த நியமனங்களும் வழங்கப்பட வேண்டும். குறித்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளோம். - என்றார். (05)

# தலதா மாளிகை, கண்டி ஆளுநர் அலுவலகம் உட்பட பல அரச நிறுவனங்களும் வெள்ளத்தினால் பாதிப்பு

பலத்த மழையின் போது கண்டி உடவத்த வன பிரதேசத்திலிருந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் ஸ்ரீதலதா மாளிகை, ஆளுநர் அலுவலகம் உட்பட பல அரச நிறுவனங்களுக்கு சேதம் ஏற்படும் அபாயம் உள்ளதாக ஆளுநர் லலித் யு.கமகே தெரிவித்துள்ளார்.

வன பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட ஏனைய அதிகாரிகள் இது தொடர்பில் அவசர நடவடிக்கை எடுக்கும் படியும் ஆளுநர் அவர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கண்டிமாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆளுநர் மேற்படி விடயத்தை தெரிவித்தார்.

கண்டி, உடவத்தை காட்டில் இருந்து நீர் வெளியேறும் பழைய வடிகால் அமைப்புகள் பராமரிக்காமையே இதற்கு ஒரு காரணம் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

உடவத்தைவனப்பகுதியில்நிர்மாணிக்கப்பட்டுள்ள வடிகால் அமைப்புகளை வனவள திணைக்களம் பராமரிக்க வேண்டும் எனவும், அத்துடன் நீர் செல்லும் ஏனைய வடிகால் அமைப்புகளை பராமரிப்பதற்கும் கண்டி மாநகர சபை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஈடுபடுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (05)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தின் சில சரத்துகள் அரசமைப்புக்கு முரண்

## மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் உயர் நீதிமன்றில் மனு



நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானது என தீர்ப்பளிக்குமாறு கோரி கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உயர்நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் சட்டமா அதிபர் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

குறித்த சட்டமூலத்தில் உள்ள விதிகள், நியாயமான காரணமின்றி எந்தவொரு நபரையும் கைது செய்து தடுத்து வைக்க இராணுவம், பொலிஸார் மற்றும் கடலோர காவல்படைக்கு அதிகாரம் அளித்துள்ளதாக மனுதாரர் கர்தினால் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பில் உறுதிப்படுத்தியுள்ள தனிமனித சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# தண்ணீர்: கவனியுங்கள்!.........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

### ஆய்வை நோக்கிய புதிய பகுதி

முன்பு இது ஒரு இருண்ட பகுதி; அடையாளம் காணப்படாதது. நச்சுத்தன்மை ஆய்வுகள் அங்கு என்னஇருக்கிறதுஎன்பதையூகித்துக்கொண்டிருந்தன. என்கிறார் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் வேதியியலாளர் டாக்டர் பெய்சான் யான்.

### பாட்டில் நீரின் வேறுமுகம்

இந்த பாட்டில் நீர் ஆய்வு என்பது இதற்கு முன் நமக்கு வெளிப்படாத ஓர் ஆச்சரியமான உலகத்தை, நாம் பார்க்கக்கூடிய ஒருபுதிய சாளரத்தை இது இப்போது திறந்துள்ளது. ஒளி கையொப்பங்களை சேகரிக்க (light signatures) நீர் மூலம் லேசர்களை சுடுவதை உள்ளடக்கிய அவர்களின் புதிய முறை என்பது, 7 பொதுவான பிளாஸ்டிக் வகைகளில் சோதனை செய்தனர். பாலிஸ்டிரீன் பிளாஸ்டிக்கின் ஒரு சிறிய துகள் ஒரு புதிய நுண்ணிய நுட்பத்தால் படம் பிடிக்கப்பட்டுள்ளது. இது சுமார் 200 நானோமீட்டர்கள் அல்லது ஒரு மீட்டரில் 200 பில்லியன்கள் ஆகும்.

பாட்டில் தண்ணீரில் மிகவும் பொதுவாக உள்ள பிளாஸ்டிக் வேதிப்பொருள் பாலிமைடு (polyamide) ஆகும். முரண்பாடாக இது நீரை சுத்தப்படுத்துவதற்குப் பதிலாக இது, பாட்டில் தண்ணீரைச் சுத்திகரிக்கப் பயன்படும் வடிகட்டிகளில் இருந்து வந்திருக்கலாம் என்று யான் கூறுகிறார்.

மற்றொரு பொதுவான வகை பிளாஸ்டிக் ஊைசிவீ /பாலிஎதிலீன் டெரெப்தாலேட் (polyethylene terephthalate) ஆகும். பெரும்பாலான பாட்டில்கள் இதில் தான் தயாரிக்கப்படுகின்றன.

தண்ணீரில் காணப்பட்ட பெரும்பாலான துண்டுகள் இந்த 7 வகையான பிளாஸ்டிக்கில் எதுவும் இல்லை. உண்மையில், ஆராய்ச்சியாளர்கள் ஒரு லிட்டருக்கு ஒரு மில்லியனுக்கும் அதிகமான பாகங்களின் துண்டு செறிவுகளைக் கண்டறிந்தனர், அடையாளம் காணப்பட்ட பிளாஸ்டிக்குகள் இவற்றில் 10% மட்டுமே.

நானோ பொருட்கள் இந்த அடையாளம் காணப்படாத துண்டுகள் ஆகும். பிளாஸ்டிக்காக இருந்தாலும், அவை கரிமப் பொருட்களாகவும் இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இந்த சிறிய துகள்களால் ஏற்படும் ஆரோக்கிய விளைவுகளைப் பார்ப்பதோடு, குழாய் நீரில் உள்ள மைக்ரோ மற் றும் நானோ பிளாஸ்டிக்குகளை அடுத்ததாக ஆராய்வதை ஆராய்ச்சியாளர்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர். நாம் இனி தண்ணீர் பாட்டில்களை கடையில் வாங்குவோமா?

**ஆதாரம்: கொலம்பியா பல்கலைக்கழகம்**

# பெலியத்தையில் ஐவரைச் சுட்டுக்கொன்ற சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டனர்

பெலியத்தை பிரதேசத்தில் ஐவரைச் சுட்டுக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர்களைக் கைது செய்ய பல தனிப்படைகள் அமைக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு மேலதிகமாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் உதவவுள்ளனர் எனப் பொலிஸார் கூறினர். (05)

## கடலுக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோய் வாய்ப்பட்டால் அவர் களுக்கு முதலுதவி அளிப்பதில் சவால்கள் இருக்கின்றன.

சில சமயங்களில் நோய்வாய்ப்பட்ட மீனவர்களுக்கு சிகிச்சை அளிக்க, நடுக்கடலில் வெளிநாடுகளின் உதவியையும் நாங்கள் பெற வேண்டியிருந்தது. மேலும், நோய்வாய்ப்பட்ட சில மீனவர்களை விரைவாக கரைக்கு அழைத்துவர இலங்கை கடற்படையின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது. அதற்கும் பெரும் தொகைப் பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது.

கடலில் சுகவீனமடைந்த மீனவர்கள் உயிரிழப்பது மிகவும் கவலையான நிலையாகும். கப்பலில் மீனவர் ஒருவர் இறந்தால் மற்றும் நோய்வாய்ப்பட்டால், மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள கப்பல் அனுமதிக்கப்படாது. மீன்பிடிப்பதை நிறுத்திவிட்டு மீண்டும் கரைக்கு வரவேண்டும்.

அப்படிக் கரைக்குத் திரும்புவதால் கடும் பொருளாதார இழப்பையும் சந்திக்க வேண்டியேற்படுகின்றது. இதன் தாக்கம் மீனவர்களுக்கு மட்டுமின்றி, ஏற்றுமதி வருமானம் மற்றும் உள்நாட்டு மீன் நுகர்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

மேலும் ஒரு மீனவர் இறந்தால் அந்த மீனவக் குடும்பத்தின் வருமானம் முற்றிலுமாக நின்று விடுகிறது. குடும்ப உறுப்பினர்களும் ஆதரவற்றவர்களாக மாறுகிறார்கள். இதற்கான நிலையான வேலைத்திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை நீண்டகாலமாகவே இருந்து வருகின்றது.

இந்த நிலைமைகள் அனைத்தையும் கருத்திற் கொண்டு, மீனவ சமூகத்தின் ஆரோக்கியத்தையும் நலனையும் மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்படும் மிகப் பெரும் திட்டமாக 'தீவர சுவ சவிய' வேலைத்திட்டத்தைக் குறிப்பிடலாம். இதன் முதற்கட்ட நிகழ்வு ஜனவரி 26 வென்னப்புவ வெல்லமங்கரய மீன்பிடித் துறைமுகத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பதிரண ஆகியோரின் தலைமையில் தொடங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து மீனவர்களும் முழுமையான மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படும். இதற்காக ஒவ்வொரு மீன்பிடித் துறைமுகத்தின் அருகிலும் உள்ள ஒரு அரச மருத்துவமனையை பெயர் குறிப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவச் சான்றிதழ் இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். சம்பந்தப்பட்ட மீனவர் கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மருத்துவச் சான்றி தழைப் பெற வேண்டும். இந்த வேலைத்திட்டத்தில் முதலில் ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்களின் மாலுமிகள், பின்னர் அந்தக் கப்பல் களின் பணியாளர்கள் உள்வாங் கப்படுவார்கள். அதன் பின்னர் நாட்டில் உள்ள அனைத்து மீனவர் களையும் இந்தத் திட்டத்தில் உள்வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து மீனவர்களுக்கும் முதலுதவி பயிற்சி மற்றும் சான்றிதழ் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஏனென்றால், கடலில் மீன்பிடிக் கும்போது ஒரு மீனவர் நோய் வாய்ப்பட்டால், மற்ற மீனவர்கள் அவருக்கு அவசர முதலுதவி அளிக்க வேண்டும். அதற்கு மீனவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி அளிப்பது அவசியம்.

பயிற்சியைப் படிப்படியாக நிறைவுசெய்ததன் பின்னர், ஒவ்வொரு கப்பலிலும் குறைந்தது ஒரு நபராவது இந்த முதலுதவி பயிற்சியாளருடன் பணியில் ஈடுபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பயிற்சித் திட்டம் இலங்கை கடற்படையின் மருத்துவப் பிரிவினால் நடத்தப்படுகிறது.

சுகாதார அமைச்சின் பரிந்துரையின் பேரில், கடலில் அவசர காலங்களில் தேவைப்படும் மருந்துகள் மற்றும் உபகரணங்கள் அடங்கிய முதலுதவிப் பெட்டியொன்று, ஒவ்வொரு கப்பலிலும் நிறுவப்படும். இந்த முழு செயல்முறையும் முடிவடைந்தால், ஆரோக்கியமான மீனவரை தொழிலுக்கு அனுப்ப முடியும்.

அவசர முதலுதவி வழங்குவதன் மூலம் அவர்களின் உயிர் ஆபத்து குறைக்கப்படுகிறது. நோய்வாய்ப்பட்ட மீனவர்களை அழைத்து வரும் செலவையும் குறைக்க முடியும். கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை கடற்படை ஆகியன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றது என்றார்.





JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போது Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை மின்சார சபை ஊழியர்கள் 10,000 பேருக்கு விளக்கமளிப்பு கடிதம்

## ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றமைக்காக

தனது ஊழியர்கள் 10,000 பேரிடம் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. சுகவீன விடுமுறையைப் பதிவு செய்து, அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றியமைக்கு விளக்கமளிக்குமாறு இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

ஊழியர்களின் அளிக்கும் பதில்களின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மின்சார சபை பேச்சாளர் பிரதி பொது முகாமையாளர் நோயல் பிரியந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றிய குற்றச்சாட்டில் இலங்கை மின்சார சபையில் ஊழியர்கள் 66 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஊழியர்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.(05)

# செங்கடலிற்கு எந்நேரமும் கப்பலை அனுப்பத் தயார்

## கடற்படை பேச்சாளர் கூறுகிறார்

அரசாங்கம் பச்சைக்கொடி காட்டி அனுமதி வழங்கியதும் கடற்பாதைகளை ஹௌத்திகிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதற்காக செங்கடலிற்கு கப்பலை அனுப்ப கடற்படை தயார் என கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

செங்கடலிற்குகப்பலைஅனுப்புவது குறித்து இன்னமும் உயர்மட்டத்தில் பேச்சுகள் இடம்பெறுகின்றன. எனினும் நாங்கள் தயாராகவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எந்தநேரத்திலும் கப்பலை அனுப்ப தயாராகவுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுகள் முடிவடைந்ததும் திகதி தீர்மானிக்கப்பட்டதும் நாங்கள் கப்பலை அனுப்புவோம். அரசாங்கத்தின் உயர்மட்டத்தினருக்கும் கடற்படை தளபதி உட்பட்டவர்களிற்கும் இடையிலான பேச்சுகளின் பின்னர் திகதி தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

## அறுவடைக்கு தயாராக இருந்த

# சுமார் 84 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை மட்டக்களப்பில் வெள்ளத்தால் அழிவு

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்போக நெற்செய்கையிடப்பட்ட சுமார் 84 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் அறுவடைக்குத் தயாராக இருந்த பயிர்கள் நீரில் மூழ்கி நாசமாகியுள்ளன என கமநல அபிவிருத்தி திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட உதவி ஆணையாளர் எஸ்.ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

இதனால் சுமார் 35 ஆயிரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சத்து 85 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையிடப்பட்டுள்ளது.

வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, செங்கலடி, கிரான், வவுணதீவு, வாகரை உட்பட பல பிரதேச செயலகப் பிரிவுகளில் செய்கையிடப்பட்ட பெரும்போக நெற்பயிர்கள் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாத்தறை - கதிர்காமம் வீதியில் விபத்தில் ஐவர் படுகாயமடைவு



மாத்தறை -கதிர்காமம் பிரதான வீதியில் ஹுங்கம மெதஎலிய பிரதேசத்தில் புதன்கிழமை வான் ஒன்றும் சிறிய லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பேருவளை பகுதியிலிருந்து கதிர்காமம் நோக்கிச் சென்ற வான் பாதையை விட்டு விலகி முன்னால் வந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் குறித்த வான் பலத்த சேதமடைந்ததுடன் ஐவர் காயமடைந்துள்ளனர். (05)

# காட்டு யானை தாக்கியதில் வர்த்தகர் பரிதாபச் சாவு

## செவனப்பிட்டியவில் சம்பவம்

வாழைச்சேனை, வெலிகந்த செவனப்பிட்டிய நகருக்கு அருகில் காட்டு யானை தாக்கியதில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று வியாபாரம் செய்யச்சென்றபோதே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மன்னம்பிட்டிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விநாயகபுரம், பகுதியைச்சேர்ந்த 48 வயதுடைய ஆறு பிள்ளைகளின் தந்தையான முருகேசு முனியாண்டி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என விசாரணைகளை மேற்கொண்டுவரும் மன்னம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

செவனப்பிட்டி சந்தைக்கு தனது குடும்பத்துடன் பொருள்களை விற்பனை செய்வதற்காக அவர் சென்று கொண்டிருந்தபோதே காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி மனம்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுசெயலாளர் பாலித்த ரங்கே பண்டார கிழக்கிற்கு பயணம்

ஐக்கிய தேசியக் கட்சியின் பொது செயலாளர் பாலித்த ரங்கே பண்டார கலந்து கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சின் செயல்பாட்டாளர்கள் சந்திப்பு கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலக கேட்போர்கூட மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளர் சிவலிங்கம் சுதர்சனன் தெரிவித்துள்ளார்.

இதில் ஐக்கிய தேசியக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த அமைப்பாளர்கள், உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பதவி நிலை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இதுபோன்று அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் கட்சியின் செயலாளர்; கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் தேர்தல்களை மையப்படுத்தி அதற்குரிய முன்னாயத்தமான கட்சியின் அமைப்பாளர்கள், உறுப்பினர்களையும், சந்தித்து ஊக்கப்படுத்தும் செயற்பாடுகள் செயலாளரின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (05)

# மோட்டார் சைக்கிளில் மோதி பாதசாரி இறப்பு

## கட்டுபொத்தவில் சம்பவம்

குருணாகல் - கட்டுபொத்த பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் மோதப்பட்டு பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

54 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின் போது கட்டுபொத்த , நெத்திபொலகெதர பகுதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியின் தெற்கு பகுதியில் பயணித்த பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர் கட்டுபொத்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, குருணாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தசம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுபொத்த பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# வவுனியா மேல் நீதிமன்றத்தினால் 300 கிலோ கஞ்சா எரித்து அழிப்பு





வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் அவர்களின் மேற்பார்வையின் கீழ் புதன்கிழமை காலை 300 கிலோவிற்கு மேற்பட்ட கஞ்சா எரிக்கப்பட்டது.

கடந்த வருடம் (2023) வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குகளில் ஒப்படைக்கப்பட்ட 300 கிலோவிற்கு மேற்பட்ட கஞ்சா வவுனியா ஏ9 வீதி சாந்தசோலை பகுதியில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மேற்பார்வையின் கீழ் நீதிமன்ற உத்தியோகத்தர்கள், நீதிமன்ற பொலிஸாரின் ஒத்துழைப்புடன் எரிக்கப்பட்டது. சுகாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு மக்கள் நடமாட்டம் மற்றும் அருகே வீடுகள் அற்ற பகுதியில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கஞ்சா எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# வெளிநாட்டில் வேலை வாய்ப்பு தருவதாக கூறிப் பண மோசடி; இரு பெண்கள் கைது



வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 83 லட்சம் ரூபாவும் அதிக பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் இரு பெண் குளியாப்பிட்டிய குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜா - எல, கொஸ்பலான ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 38 மற்றும் 64 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சந்தேக நபர்கள் கந்தானை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்களில் ஒருவருக்கு எதிராக ஹெட்டிபொல நீதிவான் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டிய குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.01.2024இல் வெளியிடப்பெற்றது.